**பிரதம மாவட்ட நீதி மன்றம், திருவள்ளூர்.**

இந்நீதிமன்ற உதவியாளர் திரு. மோகன் அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு இந்திய சாட்சிய சட்டம் 1871, பிரிவு 1-ன் கீழ் மனுதாரர்/ எதிர்மனுதாரர் தரப்பு 1வது சாட்சியாக விசாரிக்கப்பட்டு 2026-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13 ஆம் நாள் பதிவு செய்யப்பட்டது.

பெயர்.......................................................................... கிராமம்..............................................................

தந்தை /கணவர் பெயர்...................................... தாலுக்கா...........................................................

தொழில்................................................................... மாவட்டம்...........................................................

------------------------------------------------------------------------------------------------------------

# I.D.O.P. No. 158/2025

# 13.02.2026

## PW1- Mr. Gabriel Francis Raj S/o. Shyam

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்</u>

**<u>முதல் விசாரணை</u>**

நான் சென்னை, பூந்தமல்லி, சென்னீர்குப்பத்தில் வசித்து வருகிறேன். நான் இந்த மனுவின் மனுதாரர். நான் மனுதாரர் தரப்பு சாட்சி 1. என் தரப்பு சாட்சியத்தை நான் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்றாக தெரியும். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதனை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன்.என் தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. கிறிஸ்துவ ஆலயத்தில் வழங்கப்பட்ட எங்களின் திருமண பதிவுச்சான்றிதழ் அசல் **ம.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட எங்களின் திருமணப் பதிவுச்சான்றிதழ் அசல் **ம.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. எனது குடும்ப அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) **ம.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. எனது ஆதார் அடையாள அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) **ம.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. எங்களின் புகைப்படம் (1 எண்ணிக்கை) மற்றும் குறுந்தகடு (1 எண்ணிக்கை) **ம.த.சா.ஆ.5** வரிசை ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மனுப்படி தீர்ப்பாக கேட்டுக் கொள்கிறேன்.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.